


மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் (25–01–2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர் /பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்ப

# இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுடன் - மேற்கு ஆஸ்திரேலிய குழுவினர் ஆலோசனை!

சென்னை, ஜன. 27 -

வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்க, இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க, பயிற்றுநர்களை உருவாக்கும் திட்டம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் மேற்கு ஆஸ்திரேலியாவின் உயர் அலுவலர் தூதுக்குழுவின் ஆலோசித்துள்ளனர்.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தொடர்பாக நேற்று முன்தினம் (25.01.2024) சந்தித்து கலந்துரையாடினர். இந்த உயர்நிலை அலுவல் பிரதிநிதிகள் குழுவில் மேற்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ரீட்டா சஃபியோட்டி பஸ் எம்.எல்.ஏ. துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்எல்ஏ எம்பிபிஎஸ்; FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர், மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர், பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சி மாநில உறவுகள் ராபி வில்லியம்சன், துணை முதல்வரின் மூத்த ஆலோசகர் மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரிதிநிதி, திருமதி நஷித் சௌத்ரி, முதலீடு மற்றும் வர்த்தக ஆணையர், இந்தியாவளைகுடா, முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. கிளியோனா ஜேம்ஸ், இயக்குனர், இந்தியாவளைகுடா, மேற்கு ஆஸ்திரேலியா முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. சுவாதி பாலசுப்ரமணியன், வர்த்தக மேம்பாட்டு மேலாளர், முதலீடு மற்றும் வர்த்தகம், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து செயலாற்றுவதற்கான சாத்தியகூறுகளை ஆராய்வதே சந்திப்பின் நோக்கமாக இருந்தது. பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய, ஆசிரியர்களுக்கான விரிவான பயிற்சிகளை கூட்டாக நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடனான நெருங்கிய கூட்டுறவைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்றவாறு பயிற்சி அளிக்க பயிற்றுநர்களை தயார் செய்யும் திட்டங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இதை செயல்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தும் வண்ணம் மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகிய இரண்டு தரப்பிலும் தொழிற்கல்விக்கான வலுவான கட்டமைப்பை வடிவமைப்பதில் உறுதியுடன் இருக்கும், இது இன்றைய மாறிவரும் வேலைவாய்ப்பு சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட தனிநபர்களை மேம்படுத்துவதற்கான கூட்டு நோக்கத்தை பிரதிபலிக்கிறது.


இக்கலந்துரையாடல் கூட்டத்தில் அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் டேரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ் குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கழகத் துணை பொதுச்செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வீரவணக்க நாள் உரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், தலைமைக் கழகப் பேச்சாளர் கம்பம் பாண்டித்துரை, மாநில நிர்வாகிகள் ப.ராணி, பார்.இளங்கோவன், இரா.நக்கீரன், சி.ஆனந்தகுமார், ப.கைலாசம், நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த், செபூபதி, அ.சிவக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.சத்தியசீலன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையத்தில் கழக மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி, தமிழப்பன் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளின் வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர்.ஆ.மணி, மாவட்டப் பொருளாளர் முருகன்,பாலக்கோடு மத்திய ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.முனியப்பன்,இல.கிருஷ்ணன், வழக்கறிஞர்.எம்வீடி.கோபால்,அன்பழகன், பாலக்கோடு பேரூர் கழக செயலாளர் பி.கே.முரளி, முன்னாள் எம்.எல்.ஏ. ஜி.எல்.வெங்கடாசலம், மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சந்தர் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் (25–01–2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர்/பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ, தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. சிறப்புரையாற்றினார்!

நாமக்கல், ஜன. 27 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகி களுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.சத்திய சீலன் வரவேற்புரை ஆற்றினார்.

நாமக்கல் தெற்கு நகர் கழக செயலாளர் ராணா ஆனந்த் தலைமை தாங்கினார். கிழக்கு நகர செயலாளர் செ.பூபதி மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.என்.டி.கௌதம், பி.சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வீர வணக்க நாள் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் கம்பம் பாண்டித்துரை மாநில கழக மகளிர் தொண்டர் அணி செயலாளர் ப. இராணி, மாநில தீர்மான குழு துணை தலைவர் பார். இளங்கோவன், கழக இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்த குமார், விவசாய அணி இணை செயலாளர் ப. கைலாசம், சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் இரா.நக்கீரன், தலைமைக் கழக பேச்சாளர் ராஜகோபால், ஒன்றிய கழக செயலாளர்கள் நாமக்கல் வி.கே. பழனிவேல், மோகனூர் பெ.நவலடி, புதுச்சத்திரம் வடக்கு எம்.பி.கௌதம், எருமப்பட்டி பாலசுப்பிரமணியம், புதுச்சத்திரம் தெற்கு ஆர்.ஜெயபிரகாஷ்,

மாவட்ட நிர்வாகிகள் சி.மணிமாறன், நலங்கிள்ளி, வே.பெ.ராணி பெரியண்ணன், டாக்டர் இரா.மாயவன், கண்ணன் (எ) ஜானகிராமன், பேரூர் கழக செயலாளர்கள் சி,செல்லப்பன், சி.பழனியாண்டி, பொது குழு உறுப்பினர்கள் சுசிதரன், சரவணகுமார், கண்ணன், பூவராகவன், விமலா சிவக்குமார் சார்பு அணி நிர்வாகிகள் சி.விஸ்வநாத், வ. இளம்பரிதி, இரா.பிரபாகரன், ரா.கலைவாணன், பொன்.சித்தார்த், டாக்டர் தீபக் குமார், ஆர்.சுரேஷ் குமார், என்.ராஜவேல், பி.முரளி, கிருபாகரன், நாசர் பாஷா, கல்யாணி மனோகரன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.செந்தில் குமார், உள்ளாட்சி மன்ற தலைவர்கள் சாந்தி வெங்கடாசலம், சரஸ்வதி கருமன்னன், பேரூராட்சி தலைவர்கள் வனிதா, சித்ரா, பாப்பு மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், நகரக் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் இறுதியாக மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல்அரசன் கார்த்தி நன்றி கூறினார்.

# கரூரில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## வி.பி.ராஜன் - செந்தாமரைக் கண்ணன் - குடந்தை ரமேஷ் சிறப்புரை!

கரூர், ஜன. 27 -

கரூர் சட்டமன்றத் தொகுதி கழகம் சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க கரூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் சுபாஷ் சந்திர போஸ் சிலை அருகே நடைபெற்றது. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.ஜி.சரவண மூர்த்தி, தலைமை வகித்தார். துணை அமைப்பாளர் டிடிகே. அருள் முருகன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, நிர்வாகிகள் ஆண்டாள் ஜி. பாலகுருபரன், காலனி செந்தில், கே சுப்பிரமணி, கரூர் கணேசன், கே. சுப்பிரமணியன், கோல்டு ஸ்பாட் ஆர் எஸ். ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ். குமார், கே. பாஸ்கரன், ப .முத்து குமார், வி கே. வேலுச்சாமி, என் எஸ். ஆறுமுகம், எஸ்டேட் வேலுச்சாமி, விகேடி. ராஜ் கண்ணு, எஸ்.காளியப்பன், சிவகாம சுந்தரி, பி.ஏ. குமார் முன்னிலை வகித்தனர். தலைமைக் கழக பேச்சாளர் வி.பி. ராஜன், செந்தாமரை கண்ணன், குடந்தை ரமேஷ் சிறப்புரை ஆற்றினர்.

தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி .விஜயகுமார், மாநகரச் செயலாளர் எஸ் பி கனகராஜ், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், நிர்வாகிகள் எஸ். சக்திவேல், ஜிம் சிவா தாச பிரகாஷ், ஏ. சுப்பிரமணியன், பி. சங்கர், அருணா பொன்னுசாமி, வி அருண், பி மோகனசுப்பு, எம். பிரின்சி, எஸ். சுதாகர், எம் விக்ரம்,கு. வடிவேல், எஸ் சுரேஷ்குமார்,கே நல்லுசாமி, எஸ். மனோகர், கே சுப்பிரமணி, சிகே. ராஜா, ஏ. கனகராஜ், எம். பாபு, பி பூபதி, கே. செந்தில்குமார், கா. அன்பரசன், பி ஏ இளவரசு, எஸ் காமராஜ், இரா பிரபு, ஆர் கந்தசாமி, கேவிஆர் வெங்கடேஷ், அலமேலு மனோகரன், ஏ கண்ணையன், கேவி தங்கவேல், எம். பாண்டியன், கே எஸ் அறிவவின்ஸ், எம் நிசா, அங்கு பசுபதி, ஆர் வெங்கடேஷ், கே. எம் பாலகிருஷ்ணன், பி.சண்முகம் கே ஆர் சுந்தர்ராஜன், ஏ ஆரோக்கிய ஜெயபால், பி. பழனிவேல், ஜி ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, ஆ.க. இளமுருகு, கேஎம் பெரியசாமி, கே செந்தில் சரவணன், விபி என் ரஞ்சித் குமார், எஸ் சாந்தி,ஆர். லட்சுமணன், பி.ராவணன், எஸ் பிரபாகரன், எஸ். சண்முகம், வி.கிரி வாசகன், ஒமேகா சுப்பிரமணி, எம் சுப்பிரமணியம், எஸ். சரவணன், பி.நாகராஜன், கீதா ராமச்சந்திரன், எஸ். ஜெகநாதன், ஆர் ரமேஷ், வி கார்த்திகேயன், எஸ். ரமேஷ், எஸ். சரவணன், டி. செந்தில்குமார், ஆர் வி ரங்கராஜ், பி .குமார், விமோகன் குமார், புவனேஸ்வரி அருண்,எம். ராஜலிங்கம், வி காமராஜ், பி கார்த்திகேயன், பி. கந்தசாமி, சி அருள்குமார், பி ஆர் கௌதம், டி நாச்சிமுத்து, என் பரமசிவம், வள்ளி வேல்முருகன், எம் பாலசுப்பிரமணியன், எஸ் வடிவேல், எம் நாராயணன், ச.ஞானசேகரன், ஆர் மருதநாயகம், பி சந்துரு, மு. ரவிச்சந்திரன், சி பாண்டியன், எம் .லதா, எஸ் பாபு குமார், வி வெங்கடாசலம், பி. மோகன், டிஜிபி வெங்கட்ராமன், பி. ரவிச்சந்திரன், பி. தங்கவேல், எம் கார்த்திகேயன், வி. சந்திரசேகர், எம் தங்கராசு, கே பி சசிகுமார்,

வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர். குமரேசன், கே வடிவேலரசு, பி. நாகராஜன், டி நாச்சிமுத்து. பி. தங்கதுரை, கே பாலசுப்பிரமணியம், பி சசிகுமார், ஏ .ராஜா, எம் சண்முகம், எஸ் கார்த்திகேயன், கே பழனி குமார், பி. இளங்கோவன், பசுவை சக்திவேல், டி மதியழகன், ஏ. லாரன்ஸ், எம் ஜாகிர் உசேன், கே மகேஸ்வரன், கே எஸ் சதீஷ்குமார், பி. சக்திவேல், ஆர். சண்முகசுந்தரம், சாலை ரமேஷ், எஸ் ரமேஷ் குமார், என் மணிகண்டன், கே ஜெயராமன்,டி. கார்த்திகேயன், எம் கோவிந்தராஜ், எஸ் அன்பு ரத்தினம், ஜி கிருஷ்ணமூர்த்தி, எம் ராமலிங்கம், எஸ் கே சிவகுமார், வி செல்வராஜ், ஹசன் நவாஸ், எஸ் முருகானந்தம், ஆர் விக்னேஷ், பி. செந்தில்குமார், ஏ விஸ்வநாத், கார்த்தி குமார், ரமேஷ் அம்பிகாபதி, வி சுரேஷ்குமார், எம் ராஜேந்திரன், வி சரவணன், பி. ராமசாமி, எம்.வினோத், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் எம். சரவணன், எஸ் மாரியம்மாள், ஏ. பூங்கோதை, ஜி. ராஜேஸ்வரி, என் ரஞ்சித் குமார், கே அருள்மணி, வி நந்தினி, எஸ் பிரேமா, எஸ் வளர்மதி, எஸ் நிர்மலா தேவி, ர.தேவி, எம் சுகந்தினி, ஆர் புவனேஸ்வரி, எஸ் யசோதா, பி.சாந்தி, வி. நிவேதா, எ .பாலவித்யா, ஆர் தெய்வானை, எஸ். இந்திராணி, பி. வசுமதி, பா. சூரியகலா, கே. சரஸ்வதி, ஏ கயல்விழி, எஸ் மோகன்ராஜ். பி. பழனிச்சாமி, இரா வேலுச்சாமி. மாணவரணி துணை அமைப்பாளர் எம் பி. கார்த்திகேயன் நன்றியுரை கூறினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற செஞ்சி தொகுதி தி.மு.க. மாணவரணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில சுற்றுச்சூழல் அணித்தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.